2026 பிப்ரவரி மாதம் 02– ஆம் தேதி திங்கட்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

O.S. நெம்பர் : 108/2020

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 02– ஆம் தேதி திங்கட்கிழமை வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1–வது நபரின் வாக்குமூலம்

(1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.டி.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW1 – அழகர்சாமி |
| தந்தை பெயர்: | ராமசாமி |
| ஊர்: | தேனி |
| வட்டம்: | தேனி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | -- |
| வயது : | 75 |

02.02.2026

**(சாட்சி ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்).**
**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

**முதல் விசாரணை**–

நான் இந்த வழக்கில் வாதியாவேன். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியாது. கையொப்பம் மட்டும் போடத் தெரியும். வழக்கு விபரங்கள் குறித்து நிரூபணவாக்குமூலத்தில் உள்ள விபரங்களை வழக்கறிஞர் எனக்கு படித்து காண்பித்து புரிந்துக்கொண்ட பின் நான் கையொப்பமிட்டு தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை வாதி தரப்பு சாட்சியமாக ஏற்க வேண்டுகின்றேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன் அவற்றை வாதி தரப்பு சான்றாவணங்களாக ஏற்றுக்கொள்ள வேண்டி பிரார்த்திக்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| 1. | 13.05.2010ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி நீரஜ் என்பவருக்கு அவரது தந்தையும், சகோதரிகளும் எழுதிக்கொடுத்த பாகப்பாத்திய விடுதலை பத்திரம் (ஆவண எண்.4203/2010) | **வா.சா.ஆ.1** | அசல் |

| | | | |
|---|---|---|---|
| 2. | 19.12.2018 ம் தேதியிட்ட வாதியும், 1ம் பிரதிவாதியும் எழுதிக்கொண்ட பதிவு செய்யப்பட்ட கிரைய உடன்படிக்கை பத்திரம் (ஆவண எண்.9403/2018)<br>(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது). | **வா.சா.ஆ.2** | அசல் |
| 3. | 03.02.2020 ம் தேதியிட்ட வாதிக்கு 1ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்படாத சம்மத உறுதிமொழி பத்திரம்<br>(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது). | **வா.சா.ஆ.3** | அசல் |
| 4. | 17.06.2020 ம் தேதியிட்ட பிரதிவாதிக்கு வாதி அனுப்பிய வழக்கறிஞர் சட்ட அறிவிப்பு | **வா.சா.ஆ.4** | அலுவலக நகல் |
| 5. | 17.06.2020 ம் தேதியிட்ட சட்ட அறிவிப்பிற்கான அஞ்சலக இரசீது மற்றும் ஒப்புகை அட்டை | **வா.சா.ஆ.5** | அசல் |
| 6. | 23.07.2023 ம் தேதியிட்ட 19.12.2018 முதல் 22.07.2020 வரையிலான காலத்திற்குண்டான தாவா சொத்திற்கான வில்லங்கச் சான்று | **வா.சா.ஆ.6** | கணினிவழிப் பெறப்பட்டது |

நான் பிராதில் கோரியவாறு தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்க வேண்டி பிரார்த்திக்கிறேன்.

**<u>2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**:- 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 02.02.2026 அன்று திங்கட்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.02.02 17:51:48 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
02.02.2026.